## இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2023–ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 27–ஆம் தேதி புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 22.09.2023

தலைவர்,
நகர் மன்றம்.

### பொருள்கள்

(1) சந்திரசேகரபுரம் இடத்தில் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு நீர் உந்துநிலையம் அமைக்க நிலம் தேவைப்படுவதால் இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான சர்வே எண். 546/5A, 546/7A என்ற இடத்தில் நீர் உந்து நிலையம் அமைக்க இடம் கோரப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சிக்குச் சொந்தமான சந்திரசேகரபுரம் கிராமம் உரக்கிடங்கு சர்வே எண். 546/5A, 546/7A என்ற இடத்தில் கிழக்குபுறம் – 75.00 மீ., மேற்குபுறம் - 46.00 மீ., வடக்குபுறம் - 110.00 மீ., தெற்குபுறம் - 110.00 மீ. என்ற அளவில் நீர் உந்து நிலையம் அமைக்க நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(1742/18/இ2)

**தீர்மானம் எண். 452**

அனுமதிக்கப்பட்டது

(2) இந்நகராட்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023–24–ஆம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். 3235/2023/அ4, நாள் 07.09.2023–இல் கீழ்க்கண்டுள்ள பணிகளை மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கி பெறப்பட்ட கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1) | இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 26–இல் உள்ள செல்லப்பா காட்டுக் கொட்டாயில் பூங்கா மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல். | 7.40 |
| 2) | இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 26–இல் உள்ள திருப்பதி நகரில் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் அமைத்தல். | 19.80 |

அலுவலகக்குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

(3906/23/இ1)

**தீர்மானம் எண். 453**

பதிவு செய்யப்பட்டது

(3) அரசாணை (4டி) எண். 39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.09.2023–இன்படி இந்நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023–24 (KNMT)–இல் பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் மற்றும் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் ( Construction of Shopping Complex and Multi level Parking in Old Bus stand at Ward No. A , Survey No. 116/1, 116/2, 116/3 ) பணிக்கு ரூ. 586.00 இலட்சத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் பங்குத் தொகை ரூ. 293.00 இலட்சமும் மற்றும் நகராட்சி பங்குத் தொகையாக ரூ. 293.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கி வரப்பெற்ற அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

(4368/22/இ1)

**தீர்மானம் எண். 454**

பதிவு செய்யப்பட்டது

( 4 ) இந்நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்திலுள்ள பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் மற்றும் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் பணிக்கு ( Construction of Shopping Complex and Multi level Parking in Old Bus stand) திட்ட பிரேரனை தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கான திட்ட பிரேரனை தயார் செய்ய ஆலோசகர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே அதற்கான ஆலோசனைக் கட்டணம் அந்த மதிப்பீட்டு தொகைக்கு 1 % சதவீதம் ஆலோசகருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(4417/23/இ1)

**தீர்மானம் எண். 455**

அனுமதிக்கப்பட்டது

(5) இந்நகராட்சியில் இராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டத்தினை கடந்த 04.09.2023–ஆம் தேதி அடிக்கல் நாட்டுவிழாவினை பொதுமக்கள் அறியும் வகையில் கீழ்கண்டுள்ள தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரக் கட்டணம் நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் விவரம் | விளம்பரக் கட்டணம் |
|---|---|---|
| 1 | தினகரன் நாளிதழ் ( Kal publication (P) Ltd. | ரூ.21360/– |
| 2 | தினமணி நாளிதழ் ( Express publication ( Madurai) ( P) Ltd. | ரூ.22260/– |
| 3 | இந்து தமிழ் இசை ( Media Advertising Care ) | ரூ.27300/– |

| | | |
|---|---|---|
| 4 | காலைகதிர் நாளிதழ் ( Fast run Services ) | ரூ.23100/– |

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட விளம்பர செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(4409/23/இ1)**

**தீர்மானம் எண். 456**

அனுமதிக்கப்பட்டது

**( 6 )** இந்நகராட்சியில் நடைபெறும் திட்டப் பணிகளை பொதுமக்கள் அறியும் வகையில் தமிழ்முரசு சுதந்திர தின சிறப்பு தொழில் மலரில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரக் கட்டணம் ரூ. **9975/–**ஐ Kal Publications (P) Ltd. அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**( 4408/23/இ1)**

**தீர்மானம் எண். 457**

அனுமதிக்கப்பட்டது

( 7 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய் மற்றும் உப்புத் தண்ணீர் குழாய்களில் உடைப்பு பழுது நீக்கம் செய்ய தளவாட சாமான்கள் **2023–24–**க்கான சப்ளை செய்தல் மதிப்பீடு ரூ. **4.80** இலட்சம் பணிக்கு **29.08.2023–**இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரர் – **2.74** % மதிப்பீட்டை விட குறைவு
M/S. சண்முகா எலக்ட்ரிக்கல்ஸ் – **0.85** % மதிப்பீட்டை விட குறைவு

மதிப்பீட்டைவிட குறைவான **2.74** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மதிப்பீட்டைவிட குறைவான **2.74** % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(3081/23/இ1)**

**தீர்மானம் எண். 458**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சிக்கு தினசரி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பெறப்படும் குடிநீர் அளவை கண்காணிக்க குடிநீர் பிரதான குழாயில் Flow Meter–யை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 5.40 இலட்சம் பணிக்கு 29.08.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

SMINT TIQ Private Limited – 0.09 % மதிப்பீட்டை விட குறைவு
Ambly Engineering Private Limited – 0.07 % மதிப்பீட்டை விட குறைவு

மதிப்பீட்டைவிட குறைவான 0.09 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள SMINT TIQ Private Limited ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மதிப்பீட்டைவிட குறைவான 0.09 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள SMINT TIQ Private Limited ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/3167/23)

**தீர்மானம் எண். 459**

அனுமதிக்கப்பட்டது

( 9 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள பகுதிகளில் தெருவிளக்கு புகார்களை சரி செய்ய உதிரி பாகங்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ. 9500/- குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவு மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(4355/23/இ2)

**தீர்மானம் எண். 460**

அனுமதிக்கப்பட்டது

(10) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் குடியிருப்பு கட்டிடம் 1974-ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் கட்டப்பட்டு 39 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் தற்போது அந்த கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் எனவே மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(4353/23/இ1)

**தீர்மானம் எண். 461**

அனுமதிக்கப்பட்டது

( 11 ) இராசிபுரம் நகராட்சி, ஆத்தூர் சாலை சர்வே எண். 127 மற்றும் 128–இல் திரு கே.கே. பழனிவேல், த/பெ. பி.குமார் என்பவர் பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை செய்யும் நிறுவனத்தை அமைத்து அந்நிறுவனத்தில் டீசல் மற்றும் பெட்ரோல் வழங்கும் 0.5 குதிரை சக்தி

கொண்ட இயந்திரங்கள் 8 எண்ணிக்கைகள், 15 கிலோ வாட் சக்தியள்ள மின்ஆக்கி– 1 எண்ணிக்கை மற்றும் 2 குதிரை சக்தி கொண்ட கம்ப்ரஸ்ஸர்–1 எண்ணிக்கை ஆகியவற்றை நிறுவ அனுமதி கோரியுள்ளார். மேற்க்கண்ட நிறுவனங்கள் அமைத்துக்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

(3614/23/எச்1)

**தீர்மானம் எண். 462**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின்கீழ் இந்நகராட்சி அலுவலகம் பின்புறம் சமையற்கூடம் செயல்பட்டு வருகிறது. மேற்படி காலை உணவு வழங்கும் போது 7 பள்ளிகளில் பயிலும் 593 மாணவ மாணவர்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய டம்ளர்கள் வாங்கியதற்கு செலவு தொகை ரூ. 12000/-க்கும், மேலும் 77–ஆவது சுதந்திர தினவிழாவில் இந்நகராட்சியில் நன்றாக பணிபுரிந்த பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கியதற்கு (270 எண்ணிக்கை) ரூ. 4000/–க்கும் ஆக மொத்தம் ரூ. 16000/– செலவின தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து ரூ.16000/- செலவு செய்ய மன்றம்அனுமதிக்கலாம்.

(4411/23/இ1)

**தீர்மானம் எண். 463**

அனுமதிக்கப்பட்டது

( 13 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2–இல் உள்ள வள்ளலார் கோவில் தெருவில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக PVC டேங்க் அமைக்க வேண்டியுள்ளது. அதற்கான மதிப்பீடு தொகை ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் வடிகால் நிதியிலிருந்து ரூ.1.00 இலட்சத்திற்கு செலவு மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4410/23/இ2)

**தீர்மானம் எண். 464**

அனுமதிக்கப்பட்டது

( 14 ) இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியிலுள்ள பழுதுகள், RO Repair மற்றும் முதலமைச்சரின் காலை உணவு திட்டக் கட்டிடத்தில் சாய்வு தளம் மற்றும் கைப்பிடி அமைத்தல் மதிப்பீடு ரூ. 2.00 இலட்சம் பணிக்கு 15.09.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| M/S. சுமதி இன்ப்ராடெக் பில்டர்ஸ் | – | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| அஞ்சனா ஸ்ரீ ஆர்க் இன்ப்ரா | – | 0.80% மதிப்பீட்டை விட அதிகம் |

மதிப்பீட்டைவிட குறைவான 0.10% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. சுமதி இன்ப்ராடெக் பில்டர்ஸ் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான 0.10 % ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. சுமதி இன்ப்ராடெக் பில்டர்ஸ் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(3568/23/இ2)**

**தீர்மானம் எண். 465**

அனுமதிக்கப்பட்டது

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.